# திருநெல்வேலி மாநகராட்சி

## 30.11.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

1) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் பழைய வார்டு எண்: 19 புதிய வார்டு எண் 39 டி.வி.எஸ்.நகர் 2-வது தெருவில் உள்ள சிறிய குடிநீர் மேல்நிலை தொட்டியானது சுமார் 30 ஆண்டுகள் கடந்த நிலையில் சிதலமடைந்து உடைந்து விழும் நிலையில் மிகவும் ஆபத்தான நிலையில் பொது மக்கள் உபயோக படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி தொட்டியை அகற்றி தரும்படி 39-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.சீதா அவர்கள் கோரியுள்ளார். எனவே மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படியும் மற்றும் பொது மக்கள் நலன்கருதி மேற்படி பழுதடைந்த சிறிய குடிநீர் மேல்நிலைத் தொட்டியை ரூ.36,000/- (ரூபாய் முப்பத்தி ஆறாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் அப்புறப்படுத்துவதற்கு மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் பழைய வார்டு எண்: 19 புதிய வார்டு எண் 39 டி.வி.எஸ்.நகர் 2-வது தெருவில் உள்ள சிறிய குடிநீர் மேல்நிலை தொட்டி சிதலமடைந்து உடைந்துவிழும் நிலையில் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படியும் மேற்படி தெருவில் உள்ள பயனற்ற மற்றும் பழுதடைந்த சிறிய குடிநீர் மேல்நிலை தொட்டியினை ரூ.36,000/- (ரூபாய் முப்பத்தி ஆறாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் அப்புறப்படுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/2998/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 189 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

2) திருநெல்வேலி மாநகராட்சி,மேலப்பாளையம் மண்டலம்,வார்டுஎண் 50 நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள இம்மாநகராட்சிக்கு சொந்தமான மாட்டுச் சந்தை வளாகத்தில் இடிந்த நிலையில் உள்ள கட்டிடங்களைஅப்புறப்படுத்த வேண்டி உள்ளது. இக்கட்டிடங்கள் எந்தநேரமும் மழைக்காலத்திலோ வேறு எந்த தருணத்திலோ இடிந்துவிடும் அபாயத்தில் இருப்பதாலும் செவ்வாய் கிழமைதோறும் நடைபெறும் மாட்டுச் சந்தை அன்று மாடுகளை கட்டிடத்தில் உள்ளே விடாமல் உயிர்சேதத்தை தவிர்க்கும் பொருட்டு ஆபத்தான நிலையில் உள்ள இக்கட்டிடங்களை அப்புறப்படுத்த மிகவும் அவசியமாகிறது. எனவே இக்கட்டிடங்களை போர்க்கால அடிப்படையில் உடனடியாக அகற்றிக் கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி,மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 50 நேதாஜி ரோட்டில் அமைந்துள்ள இம்மாநகராட்சிக்கு சொந்தமான மாட்டுச் சந்தை வளாகத்தில் உள்ள பழைய இடிந்த நிலையில் உள்ள அபாயகரமான கட்டிடத்தை உயிர்சேதத்தை தவிர்க்கும் பொருட்டு கட்டிடங்களை உடன் அப்புறப்படுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 190 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

3) திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 16 சங்கரன்கோயில் ரோடு (சாலியர் தெருவில்) உள்ள மாநகராட்சி பொது கழிப்பிடமானது, அதன் ஆர்.சி.சி. கூரைகளில் மிகவும் பழுதடைந்து கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலையில் விஷ ஜந்துகள் அடையுமிடமாகவும் உள்ளது. இதனால் அருகில் உள்ள குடியிருப்புகளில் விஷ ஜந்துக்கள் வெளியேறி பொதுமக்களுக்கு அச்சத்தினை ஏற்படுத்தி வருகின்றது. ஆகவே மேற்கண்ட் எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ள கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட உத்தேச செலவினம் ரூ 85,000/-ஆகும், மேற்கண்ட செலவினம் ரூ 85,000/-க்கு நிர்வாக அனுமதியும், பழுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும், மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பிடத்தினை பொதுமக்களின் பாதுகாப்பினை கருதி இடித்து அப்புறப்படுத்திட ஆகும் செலவினம் ரூ 85,000/-க்கும், கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 191 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகுநகரத் திட்டத்தின் கீழ் (Smart City Limited) கீழ், மேலப்பாளையம் மண்டலம் டாக்டர் எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் மேற்கு புறத்தில் அடுக்கு மாடி இருசக்கர வாகன காப்பகம் அமைத்தல் பகுதி - 2 திட்டப் பணிக்கு மதிப்பீடு ரூ.9.41 கோடிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3 நாள் : 29.01.2021-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் படியும், தலைமைப் பொறியாளர் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண்.1473/2020/DO-2 நாள் : 02.02.2021-ன் படி தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 09/2020-21/SCM ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழின் 28.01.2021 அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் 04.02.2021- லும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறைமுறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 25.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு மின்னணு முறையில்லாத இரு உறைமுறையில் M/s. Sri Naachimar Engineering Construction, Namakkal மற்றும் M/s. Sri Ramana Building Construction Pvt Ltd., Ramanathapuram ஆகிய இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் M/s. Sri Ramana Building Construction Pvt Ltd., Ramanathapuram நிறுவனத்தின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 5.09% கூடுதலாக உள்ளதால் ,மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மதிப்பீட்டை விட4.95% அதிகமான மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத் தீர்மானம் எண்.261 நாள் 26.02.2021-ன் படி ஒப்புக் கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 26.02.2021அன்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. மேற்படி திட்டப் பணிக்கான ஒப்பந்தமதிப்பு ரூ.9,37,80,660/- ஆகும்.

மேற்படி பேருந்து நிலையத்தின் மேற்குபுறத்தில் அடுக்கு மாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் பகுதி - 2 திட்டப்பணியில், திட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டுள்ள சில பணிகளை அளவினை விட கூடுதலான அளவில் அமைக்க வேண்டியதின் காரணமாக இரும்பு

கம்பிகள், கட்டிடபணிகள், கூடுதலான அளவிலும் மற்றும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத ஒரு சில இனங்களும் பணித்தளத்தில் மேற்கொள்ளப்படவேண்டி இருந்தது.

மேற்படி பணிகளை மேற்கொள்ளும் போது திட்ட செலவினத் தொகையில் கூடுதலாக எந்த தொகையும் ஏற்படாத பட்சத்தில் ஒப்பந்த மதிப்பு தொகைக்கு உள்ளாகவே .பணிகள் நிறைவடைவதால் அளவினை விட கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட பணிக்கும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணிக்கும், மேற்படி கூடுதல் பணிக்கான தொகைஒப்பந்த தொகைக்கு குறைவாக இருப்பதால் உரிய அனுமதியினை தலைமை பொறியாளர்,நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் பெற்று பேருந்து நிலைய திட்டப் பணியினை செயல்படுத்திட மாமன்றஅ னுமதிக்கு இவ்வலுவலக கடித எண் 09/2020-21/SCM ___ன் படி பொது நலன் கருதி இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு மாநகராட்சி ஆணையர் மற்றும் சீர்மிகுநகர திட்ட மேலாண்மை இயக்குநர் அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி வழங்கப்பட்ட ஆணைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

பொருளில் கண்ட விபரப்படி, சீர்மிகுநகரத் திட்டத்தின் கீழ் (Smart City Limited) கீழ், மேலப்பாளையம் மண்டலம் டாக்டர் எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் மேற்கு புறத்தில் அடுக்கு மாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் பகுதி - 2 திட்டப்பணிக்கு 26.02.2021 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. மேற்படி பேருந்து நிலைய மேம்பாட்டு கட்டுமானப் பணியில், பணித்தளத்தின் தன்மைக்கேற்ப ஒரு சில இனங்கள் மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டுள்ளதினை விட கூடுதலான அளவிலும், வழி வகை செய்யப்படாத ஒரு சில இன பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.

மேற்படி கூடுதல் தொகை ஒப்பந்த மதிப்பு தொகைக்கு குறைவாக இருப்பதால் உரிய அனுமதியினை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் பெற்று பேருந்து நிலைய திட்டப் பணியினை செயல்படுத்திட மாமன்ற அனுமதி வழங்கலாம்.

(அ). மேலும்,மேற்படி திட்டப் பணியில் வழிவகை செய்யப்படாத இனங்கள் மற்றும் மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டு கூடுதலானஅளவில் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) இப் பணியினை தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு மாநகராட்சி ஆணையர் மற்றும் சீர்மிகு நகர திட்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள் அனுமதியினை எதிர்நோக்கி வழங்கப்பட்ட ஆணைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்09/2020-21/SCM

**தீர்மானம் எண்: 192 அலுவலகக்குறிப்பு அ) மற்றும் ஆ) அங்கீகரிக்கப்பட்டது.**

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் (Smart City Limited) கீழ், மேலப்பாளையம் மண்டலம் டாக்டர் எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் அடுக்கு மாடி இருசக்கர வாகன காப்பகம் அமைத்தல் பகுதி - 1 திட்டப்பணிக்கு மதிப்பீடு ரூ.13.73 கோடிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3 நாள் : 29.01.2021 - ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண்.1473/2020/DO-2 நாள் : 02.02.2021 - ன் படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 09/2020-21/SCM ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழின் 28.01.2021 அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 04.02.2021 - லும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 25.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் M/s. Sri Naachimar Engineering Construction, Namakkal மற்றும் M/s. Sri Ramana Building Construction Pvt Ltd., Ramanathapuram ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் M/s. Sri Ramana Building Construction Pvt Ltd., Ramanathapuram நிறுவனத்தின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 5.20% கூடுதலாக உள்ளதால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மதிப்பீட்டை விட 4.95% அதிகமான மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத் தீர்மானம் எண்.260 நாள் 26.02.2021-ன் படி ஒப்புக் கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 26.02.2021 அன்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. மேற்படி திட்டப்பணிக்கான ஒப்பந்த மதிப்பு ரூ.13,74,28,442/- ஆகும்.

மேற்படி பேருந்து நிலையத்தின் மேற்கு புறத்தில் அடுக்கு மாடி இருசக்கர வாகன காப்பகம் அமைத்தல் பகுதி - 1 திட்டப்பணியில், திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள சில பணிகளை மதிப்பீட்டு அளவினை விட கூடுதலான அளவில் அமைக்க வேண்டியதின் காரணமாக இரும்பு கம்பிகள், கட்டிட பணிகள், கூடுதலான அளவிலும் மற்றும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத ஒரு சில இனங்களும் பணித்தளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.

மேற்படி பணிகளை மேற்கொள்ளும் போது திட்ட செலவினத் தொகையில் ஒப்பந்த மதிப்பு தொகைக்கு கூடுதலாக ரூ.1.10 கோடி ஏற்படும் பட்சத்தில் அளவினை விட கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட பணிக்கும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணிக்கும், மேற்படி கூடுதல் பணிக்கான தொகை ஒப்பந்த தொகைக்கு குறைவாக இருப்பதால் உரிய அனுமதியினை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் பெற்று பேருந்து நிலைய திட்டப்பணியினை செயல்படுத்திட மாமன்ற அனுமதிக்கு இவ்வலுவலக கடித எண் 09/2020-21/SCM ___ ன் படி பொதுநலன் கருதி இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு மாநகராட்சி ஆணையர் மற்றும் சீர்மிகு நகர திட்ட மேலாண்மை இயக்குநர் அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி வழங்கப்பட்ட ஆணைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

பொருளில் கண்ட விபரப்படி, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் (Smart City Limited) கீழ், மேலப்பாளையம் மண்டலம் டாக்டா எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் அடுக்கு மாடி இருசக்கர வாகன காப்பகம் அமைத்தல் பகுதி - 1 திட்டப்பணிக்கு 26.02.2021 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. மேற்படி பேருந்து நிலைய மேம்பாட்டு கட்டுமானப் பணியில், பணித்தளத்தின் தன்மைக்கேற்ப ஒரு சில இனங்கள் மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டுள்ளதினை விட கூடுதலான அளவிலும், வழி வகை செய்யப்படாத ஒரு சில இன பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.

மேற்படி கூடுதல் தொகை ஒப்பந்த மதிப்பு தொகைக்கு ரூ.1.10 கோடிகூடுதலாகஇருப்பதால் உரிய அனுமதியினை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் பெற்று பேருந்து நிலைய திட்டப்பணியினை செயல்படுத்திட மாமன்ற அனுமதி வழங்கலாம்.

(அ). மேலும், மேற்படி திட்டப்பணியில் வழிவகை செய்யப்படாத இனங்கள் மற்றும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டு கூடுதலான அளவில் மேற்கொள்வதற்கும் அதற்காக கூடுதலாக வரப்பெறும் தொகையை சீர்மிகு நகரத்திட்டத்தின் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ). இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு மாநகராட்சி ஆணையர் மற்றும் சீர்மிகு நகர திட்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள் அனுமதியினை எதிர்நோக்கி வழங்கப்பட்ட ஆணைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்09/2020-21/SCM

**தீர்மானம் எண்: 193 அலுவலகக்குறிப்பு அ) மற்றும் ஆ) அங்கீகரிக்கப்பட்டது.**

---

6) திருநெல்வேலி மாநகராட்சியின் 2021-2022 ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சியின் 2021-2022 ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந க எண் சி1/2319/2020

**தீர்மானம் எண்: 194 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

7) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள வ.உ.சி. மைதானம், பாரம்பரிய சின்னமான மேடை காவல்நிலையம் , புதிய பேருந்து நிலையம், வர்த்தக மையம் மற்றும் மாநகராட்சி திருமண மண்டபங்கள் ஆகியவற்றை முறையாக பராமரித்தல், அங்கு நடைபெற உள்ள நிகழ்ச்சிகளை கணினியில் முன் பதிவு செய்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஆறு மேலாளர்கள் தேவைப்படுகின்றனர். தேவைப்படும் மேலாளர்களை முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (டெக்ஸ்கோ) மூலம் பணியமர்த்தினால் மாதம் ஒன்றுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு செலவினம் ஏற்படும்.

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | மாத ஊதியம் ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | 6 | ரூ. 25531/- (சேவைக் கட்டணம் 12% மற்றும் சேவை வரி 18% தனி) |

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளின் அவசியம் கருதி டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் ஆறு மேலாளர்களை தற்காலிகமாக ஓராண்டு காலத்திற்கு பணியில் ஈடுபடுத்திடவும், அவர்களுக்கான ஊதிய செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் (டெக்ஸ்கோ) மூலம் 6 மேலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும், அதற்கான ஊதிய செலவினங்களுக்கும், அவ்வப்போது அரசால் உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம், அவசியம்

கருதி 17.11.2022 முதல் 2 டெக்ஸ்கோ மேலாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
(சி2/8109/2018)

**தீர்மானம் எண்: 195 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

8) திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி டவுண் காட்சி மண்டபம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கான பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்ட ஒப்பந்ததாரரால் செலுத்திய வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. T. இசக்கிமுத்து என்பவரால் 18.04.2022ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியின் விவரம் | தொகை ரூ (வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை | திருநெல்வேலி மண்டல காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டின் விபரம் |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி டவுண் காட்சி மண்டபம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்ககப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம இனம் | 22,000 + 22, 000 (பற்றுச்சீட்டு எண் 2012109855 & 2012109856 நாள் 6.3.2013) | 2012-2013 தொகுதி 1 பக்கம் எண் :18 . |

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட விபரப்படி உள்ள வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ. 44,000/-(ரூபாய் நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) ஒப்பந்ததாரர் திரு. T. இசக்கிமுத்து என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் அ1/860/ 2022

**தீர்மானம் எண்: 196 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

9) பணிகள் சம்பந்தமான திருத்தியமைக்கப்பட்ட நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி தொடர்பான அரசாணை நிலை எண்.158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.11.2022 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு மேற்படி பணிகள் சம்பந்தமான திருத்தியமைக்கப்பட்ட நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி தொடர்பான அரசாணையினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.இ1/7165/2022)**

**தீர்மானம் எண்: 197 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

10) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் திட மற்றும் திரவக் கழிவு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வாகனங்களை இயக்குவதற்கு போதுமான ஓட்டுநர்கள் இம்மாநகராட்சியில் இல்லை. எனவே, பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியம் கருதியும் மேற்படி வாகனங்களை இயக்குவதற்கு ஏதுவாகவும் வெளிக்கொணர்வு முறையில் (Outsource) பணியாளர்களை அமர்த்திக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீ செந்தூர் முருகன் ஓட்டுநர்கள் பணிக்குழு மேலப்பாளையம் முகவரியில் உள்ள சங்கமானது 1975ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 17.10.2022ல் பதிவு செய்யப்பட்டு அதற்கான ஆவண நகலினை மேற்படி சங்கம் சமர்ப்பித்துள்ளது. எனவே, இம்மாநகராட்சியில் ஓட்டுநர் பணிகளை மேற்கொள்வதற்கு மேற்படி ஸ்ரீ செந்தூர் முருகன் ஓட்டுநர்கள் குழுவினை பயன்படுத்திக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப் படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, இம்மாநகராட்சியில் வாகனங்களை இயக்குவதற்கு போதுமான ஒட்டுநர்கள் இல்லாத நிலையில் வெளிக்கொணர்வு முறையில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருப்பதால், மேற்படி ஸ்ரீ செந்தூர் முருகன் ஓட்டுநர்கள் பணிக்குழுவானது 1975ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 17.10.2022 -ல் பதிவு செய்யப்பட்டுள்ளதின்படி, மேற்படி ஸ்ரீ செந்தூர் முருகன் ஓட்டுநர்கள் பணிக்குழுவினை பயன்படுத்திக்கொள்வது குறித்து மாமன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.இ2/7245/2022)

**தீர்மானம் எண்: 198 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

11) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.25.5.2009ன்படி 2022-2025-ஆம் காலத்திற்கான மூன்று ஆண்டு காலத்திற்கு மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்க்கண்ட கழிப்பிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகத்தில் வைத்து 27.10.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு, மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களில் உள்ள விளம்பர பலகைகளிலும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

உரிம இனம் விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2** | **மேலப்பாளையம் மண்டலம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 5 எண்ணங்கள் நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் மேலப்பாளையம் சந்தை ரவுண்டானா பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | | | | |
| **அ** | **உள்ளூர் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம்** | **2.00** | **4.00** | **2.00** | **4.50** |
| **ஆ** | **நடைமேடை - 1<br>நாகர்கோவில் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம்** | **2.00** | **4.00** | **2.00** | **4.50** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ) | **நடைமேடை - 2 மற்றும் 3-ன் மத்திய பகுதி திருச்செந்தூர் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம்** | **3.20** | **6.50** | **3.20** | **8.00** |
| ஈ) | **நடைமேடை - 4 மற்றும் 5-ன் மத்திய பகுதி தென்காசி பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம்** | **3.20** | **6.50** | **3.20** | **8.00** |
| உ) | **நடை மேடை- 6 சென்னை பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம்** | **0.75** | **1.50** | **0.75** | **3.00** |
| ஊ) | **மேலப்பாளையம் ரவுண்டானா கார்னர் கழிப்பிடம்** | **0.50** | **1.00** | **0.50** | **2.00** |

மேற்படி உரிம இனங்களுக்கு 27.10.2022 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட உச்ச ஒப்பந்ததாரர்களான 1) திரு. D.மாரிமுத்து 2) திரு.ஆர்.பொன்னுசுடலை 3) திருமதி.எஸ்.பி.சாந்தி ஆகியோர் திருநெல்வேலி மாநகராட்சி பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு ஒப்புக் கொண்டு தற்போது மேற்படி கழிப்பிடத்தை தங்களால் நடத்த இயலாது எனவும், அந்த ஏல இனத்தை ரத்து செய்து தரும்படி விரைவு தபால் மூலம் மனு அளித்தும், தற்போது அரசுக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் அமைவதால் அந்த மனுவை திரும்ப பெற்று கொள்கிறேன் எனவும், மேலும், தாங்கள் உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள கழிப்பிடங்களை தங்களுக்கே ஜாரி செய்து நடத்திட ஆவண செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

**அ) ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத் தொகை ரூ. 4,50,000/-)**

மேற்கண்ட வரிசை எண் 2 (அ)-வில் உள்ள உள்ளூர் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் இருவர் மட்டும் கலந்து கொண்டனர்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு. D.மாரிமுத்து<br>20 A/2 குறிச்சி மெயின் ரோடு,<br>குலவணிகர்புரம் | வைப்புத்தொகை ரூ. 200000 TMB Bank DD. No. 728620 நாள்: 25.10.2022 மற்றும் சால்வன்சி ரூ. 500000 லட்சத்திற்கு சமர்ப்பித்துள்ளார். Certificate No. TN-1720220922114 dated 29.9.2022 | ரூ.475501/- |
| 2 | திரு. S.P. மகாராஜா,<br>30, அம்மன் கோவில் தெரு,<br>பவுண்ட் ரோடு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.200000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 321419 dated 1.10.2022 மற்றும் DD. No. 321462 dated 26.10.2022 மற்றும் சால்வன்சி மதிப்பு ரூ.40,00,000/-க்கு சமர்ப்பித்துள்ளார். Certificate No. TN-1720220502147 dated 12.05.2022 | ரூ.460101/- |

மேற்காணும் உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் வரிசை எண் 1-ல் உள்ள திரு. D.மாரிமுத்து என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.4,75,501/- குறுமத்தொகையைவிட ரூ.25501/- கூடுதலாக இருப்பதால், திரு. D.மாரிமுத்து என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.4,75,501/-ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

ஆ) **ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத் தொகை ரூ. 8,00,000/-)**

மேற்கண்ட வரிசை எண் 2 (இ)-வில் உள்ள நடைமேடை 2 மற்றும் 3-ன் மத்திய பகுதி திருச்செந்தூர் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் இருவர் மட்டும் கலந்து கொண்டனர்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பொன்னுசுடலை<br>29/1, காமராஜ் காலனி,<br>சமாதானபுரம்,<br>பாளையங்கோட்டை | வைப்புத்தொகை ரூ. 320000/- Bank of India DD. No. 592345 நாள்: 26.10.2022 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ. 320000 Bank of India DD. No. 592344 நாள்: 26.10.2022 | ரூ.975000/- |
| 2 | திரு.M.லெட்சுமணமூர்த்தி<br>6/210/2 CSI சர்ச் தெரு,<br>செய்துங்கநல்லூர் | வைப்புத்தொகை ரூ.320000/- கரூர் வைஸ்யா வங்கி DD. No. 301524 dated 25.10.2022 மற்றும் சால்வன்சி மதிப்பு ரூ.15,00,000/-க்கு சமர்ப்பித்துள்ளார். Certificate No. TN-1720220820118 dated 27.8.2022 | ரூ.860000/- |

மேற்காணும் உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் வரிசை எண் 1-ல் உள்ள திரு.ஆர்.பொன்னுசுடலை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.9,75,000/- குறுமத்தொகையைவிட ரூ.1,75,000/- கூடுதலாக இருப்பதால், திரு.ஆர்.பொன்னுசுடலை என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.9,75,000/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

இ) **ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத் தொகை ரூ. 8,00,000/-)**

மேற்கண்ட வரிசை எண் 2 (ஈ)-வில் உள்ள நடைமேடை 4 மற்றும் 5-ன் மத்திய பகுதி தென்காசி பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் இருவர் மட்டும் கலந்து கொண்டனர்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.பி.சாந்தி,<br>5/9, பெருமாள் வடக்கு ரதவீதி,<br>திருநெல்வேலி சந்திப்பு | வைப்புத்தொகை ரூ.320000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 321420 dated 1.10.2022 மற்றும் DD. No. 321459 dated 25.10.2022 மற்றும் சால்வன்சி மதிப்பு ரூ.40,00,000/-க்கு சமர்ப்பித்துள்ளார். Certificate No. TN-1720220622106 dated 28.6.2022 | ரூ.902101/- |
| 2 | திரு.எஸ்.சங்கர்,<br>15ஏ, பட்டு பிள்ளையார் கோவில் தெரு,<br>பாளையங்கோட்டை | வைப்புத்தொகை ரூ.320000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 321457 dated 25.10.2022 மற்றும் DD. No. 321464 dated 26.10.2022 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.320000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 321456 dated 25.10.2022 மற்றும் DD. No. 321463 dated 26.10.2022 | ரூ.850101/- |

மேற்காணும் உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் வரிசை எண் 1-ல் உள்ள திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.9,02,101/- குறுமத்தொகையைவிட ரூ.102101/- கூடுதலாக இருப்பதால், திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் உச்ச

ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.9,02,101/-ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு**

அ) பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் உள்ளூர் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 27.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திரு. D.மாரிமுத்து என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.4,75,501/- குறுமத்தொகையைவிட ரூ.25501/- கூடுதலாக இருப்பதால், திரு. D.மாரிமுத்து என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.4,75,501/-ஐ ஏற்று, திரு. D.மாரிமுத்து என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் நடைமேடை 2 மற்றும் 3-ன் மத்திய பகுதி திருச்செந்தூர் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 27.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திரு.ஆர்.பொன்னுசுடலை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.9,75,000/- குறுமத்தொகையைவிட ரூ.1,75,000/- கூடுதலாக இருப்பதால், திரு.ஆர்.பொன்னுசுடலை என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.9,75,000/- ஐ ஏற்று, திரு.ஆர்.பொன்னுசுடலை என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

இ) பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் 2 (ஈ)-வில் உள்ள நடைமேடை 4 மற்றும் 5-ன் மத்திய பகுதி தென்காசி பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 27.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.9,02,101/- குறுமத்தொகையைவிட ரூ.102101/- கூடுதலாக இருப்பதால், திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.9,02,101/-ஐ ஏற்று, திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண் மே.பா. அ1/655/2022)**

**தீர்மானம் எண்: 199 அலுவலகக்குறிப்பு அ), ஆ) மற்றும் இ) அங்கீகரிக்கப்பட்டது.**

---

12) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட மனக்காவலம் பிள்ளை ஆஸ்பத்திரி ரோட்டில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ்,பல்நோக்கு சிறிய கூட்ட அரங்க கட்டிடம் கட்டும் திட்டப் பணிக்கு ரூ.9.91 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்க்கண்ட விபரங்களின் அடிப்படையில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தரைகீழ்த்தளம் | : | 6458 சதுரஅடியில் 14 நான்குசக்கரவாகனங்கள் நிறுத்தும் வகையில்அமைந்துள்ளது. |
| தரைதளம் | : | 4930 சதுரஅடியில் சமையலறைமற்றும் உணவுக்கூடம் 100 இருக்கைகள் கொண்டது. |
| முதல்தளம் | : | 4930 சதுரஅடியில் பல்நோக்குஅரங்ககட்டிடம் மேடையுடன் 200 இருக்கைகள் மற்றும் 2 அறைகள் கொண்டது. |
| இரண்டாம்தளம் | : | 4930 சதுரஅடியில் பல்நோக்குஅரங்ககட்டிடம் மேடையுடன் 100 |

இருக்கைகள் கொண்டது. உணவுஅருந்தும் கூடம் 60 இருக்கைகள் கொண்டது.

பொதுப்பணித் துறை வழிக்காட்டுதலின் படி கட்டிடம் கட்டி முடிப்பதற்கான செலவினத்தில் 12% என மாதாந்திர வாடகையாக ரூ.8,26,547/- ஆகும் என மாநகர பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளி மார்க்கெட் சந்தை மதிப்பினை விசாரித்ததில் பாளை மண்டலத்தில் உள்ள மண்டபங்களின் விபரம் கீழ்க்கண்டவாறு சேகரிக்கப்பட்டது.

| திருமணமண்டபத்தின் விபரம் | | | |
|---|---|---|---|
| வ.எண். | திருமணமண்டபத்தின் பெயர் | சதுரஅடி | நாள் ஒன்றுக்குவாடகை ரூ. |
| 1 | சீனிவாசமஹால்<br>பெருமாள்கீழரதவீதி | 4500 | 30,000/- |
| 2 | வீரபாண்டியன் மஹால்<br>பெருமாள் வடக்குமாடவீதி | 4000 | 50,000/- |
| 3 | கோபாலன் மஹால்<br>பெருமாள்கீழரதவீதி | 1250 | 25,000/- |
| 4 | JK மஹால்<br>பெருமாள் மேலமாடவீதி | 2400 | 25,000/- |
| 5 | செல்விமஹால் (AC)<br>திருவனந்தபுரம் ரோடு | 4400 | 1,70,000/- |
| 6 | VMS மஹால் | 6000 | 90,000/- |
| 7 | BBL மஹால் | 7200 | 59,000/- |
| 8 | RRA மஹால் | 3000 | 40,000/- |
| 9 | ஸ்ரீ லெட்சுமி மஹால் (AC)<br>வி.எம்.சத்திரம் | 5000 | 70,000/- |
| 10 | சொர்ணம் திருமண மண்டபம்<br>மகாராஜநகர் | 4500 | 70,000/- |

இவ்விரண்டு மதிப்பீடுகளையும் பரிசீலிக்கப்பட்டு ஆணையாளருடன்ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யலாம் எனஉத்தேசிக்கப்பட்டுள்ளது.

| தளங்களின் விபரம் | ஒருநாள் வாடகை | அரைநாள் வாடகை | இதரசெலவு |
|---|---|---|---|
| தரைதளம் மற்றும் முதல்தளம் | ரூ.1,25,000/- | ரூ.65,000/- | GST தொகை,மின்கட்டணம்,துப்புரவுசெலவு(Cleaning Charge) |
| இரண்டாம் தளம் | ரூ.70,000/- | ரூ.35,000/- | |
| தரைதளம்,முதல்தளம், இரண்டாம் தளம் சேர்ந்து | ரூ.1,80,000/- | ரூ.1,00,000/- | |

அலுவலககுறிப்பு:

திருநெல்வேலிமாநகராட்சிபாளையங்கோட்டைமண்டலஅலுவலகத்திற்குஉட்பட்டமனக்காவலம் பிள்ளை ஆஸ்பத்திரி ரோட்டில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ்,பல்நோக்கு சிறிய கூட்டஅரங்க கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/ந.க.எண்/4404/22

**தீர்மானம் எண்: 200 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

13) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தின் தரைதளத்தில் உள்ள கடை எண் G-19 அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலையில் ,மேற்படி கடையினை ஏலம் விட தெரிவிக்கப்பட்டது.

எனவே ஏலம் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள வைப்புத் தொகை,சால்வன்சி தொகை, சால்வன்சி இல்லையேல் கூடுதல் வைப்புத் தொகை மற்றும் குறுமத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| கடைஎண் | கடையின் அளவு (சதுரஅடி) | வைப்புத் தொகை | சால்வன்சிமதி ப்புத் தொகை | சால்வன்சி இல்லையேல் கூடுதல் வைப்புத் தொகை | குறுமத் தொகை |
|---|---|---|---|---|---|
| G19 | 600 | ரூ.10 இலட்சம் | ரூ.20 இலட்சம் | ரூ. 10 இலட்சம் | 60,000/- |

மேலும் முதல்தளகடை எண் F 23-ஐ தற்போது மாணவர்கள் படிக்கும் படிப்புக் கூடமாக (Study Hall) மாற்றப்பட்டு, படிப்பு கூடத்தில் புத்தகம் படிக்க வருகை புரியும் ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய்.12/- எனவும் ,மாதம் ஒன்றுக்கு ரூபாய்.250/- எனவும் வசூல் செய்யலாம். மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும்

அலுவலககுறிப்பு:

பொருளில் கண்டுள்ள கடைஎண் G-19 அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலையில் ,மேற்படி கடையினை ஏலம் விட தெரிவிக்கப்பட்டது. எனவே ஏலம் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள வைப்புத் தொகை, சால்வன்சி தொகை, சால்வன்சி இல்லையேல் கூடுதல் வைப்புத் தொகை மற்றும் குறுமத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் முதல் தள கடை எண் F 23-ஐ தற்போது மாணவர்கள் படிக்கும் படிப்புக் கூடமாக (Study Hall) மாற்றப்பட்டு, படிப்பு கூடத்தில் புத்தகம் படிக்க வருகை புரியும் ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய்.12/- எனவும் ,மாதம் ஒன்றுக்கு ரூபாய்.250/- எனவும் வசூல் செய்யலாம். மேற்கண்ட விபரங்களை மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/ந.க.எண்/3990/21

**தீர்மானம் எண்: 201 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

14) திருநெல்வேலி மாநகராட்சியில் புதிய தெருவிளக்குகள் பொருத்தும் பணிகளுக்கு ESCO நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மேற்படி நிறுவனம் மூலம் புதிய தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் சம்பந்தப்பட்ட ESCO நிறுவனத்திற்கு

ஒப்பந்த நிபந்தனைகள் பக்கம் எண்.36ல் வரிசை எண்.17 ல் (Installation of New ESM Equipments during the contract period) மொத்த முதலீட்டு தொகையில் விநியோகம் செய்து பொருத்திய வகைக்கு 70 சதவீத பட்டியல் தொகை மட்டும் வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 25% தொகை ரூ.33,59,987/- மட்டும் நாளது வரை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாமல் உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட ESCO நிறுவனமான ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் பட்டியலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 25% தொகை ரூ.33,59,987/-ஐ சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் புதிய தெருவிளக்குகள் பொருத்தும் பணிகளுக்கு ESCO நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மேற்படி நிறுவனம் மூலம் புதிய தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு விட்டபடியால், மேற்படி நிறுவனத்தின் பட்டியலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 25% பட்டியல் தொகை ரூ.33,59,987/- ஐ (ரூ.முப்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஏழு) மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கலாம்.

(ந.க.எண்.இ4/287/2012)

**தீர்மானம் எண்: 202 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

15) திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களிலும் பொது சுகாதாரப் பணிகளுக்குத் தேவையான அனைத்து பணிகளிலும் மற்றும் துாய்மை இந்தியா இயக்கம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் பணிகளிலும் விழிப்புணர்வு பணி மேற்கொள்ளவும், குப்பையை தரம் பிரித்து உரமாக்குவது சம்மந்தமாக பொது மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் நுண்ணயிர் உரமாக்குதல் (MCC) மையத்தினை கண்காணித்து பராமரிக்கும் பணி போன்ற பணிகளுக்கு பணிகளை மேற்கொள்வதற்கு பாளையங்கோட்டை மற்றும் திருநெல்வேலி மண்டலத்திற்கு 3 நபர்கள் வீதம் ஆறு நபர்களும் மேலப்பாளையம் மண்டலத்திற்கு 5 நபர்களும் தச்சநல்லுார் மண்டலத்திற்கு 2 நபர்களும் ஆக மொத்தம் 13 நபர்கள் கொண்ட பொருநை நண்பர்கள் சுகாதார பணிக்குழுவினை நியமிக்கப்பட்டு (23-09-2022முதல்) மாமன்றத்தீர்மானம் எண்:173 நாள்:28.10.2022ன்படி பணியில் ஈடுபடுத்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தற்போது தாய் சேய் நல செயலி பணியினை மேற்கொள்ளும் வகையில் தச்சநல்லுார் மண்டலத்திற்கு கூடுதலாக 3 பணியாளர்களை 01.12.2022 முதல் பணியில் ஈடுபடுத்திடவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை M3/15043/2022 நாள்:28.06.2022ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.411/- என்ற கணக்கில் 3 நபர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஆகும் செலவினம் ரூ.36990/-க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களிலும் பொது சுகாதாரப் பணிகளுக்குத் தேவையான அனைத்து பணிகள் மற்றும் துாய்மை இந்தியா இயக்க பணிகளில் விழிப்புணர்வு பணி மேற்கொள்ளவும், குப்பை தரம் பிரித்து உரமாக்குவது சம்மந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் நுண்ணுயிர் உரமாக்குதல் (MCC) மையத்தினை கண்காணித்து பராமரிக்கும் பணி ஆகிய பணிகளுக்கு 13 நபர்கள் கெண்ட பொருநை நண்பர்கள் சுகாதாரபணிக்குழுவில் கூடுதலாக 3 நபர்களை தாய் சேய் நல செயலி பணியில் 01.12.2022 முதல் பணியில் ஈடுபடுத்திடவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை M3/15043/2022 நாள்: 28.06.2022ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.411/- ஊதியமாக வழங்கவும், 3 நபர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஆகும் செலவினம் ரூ.36,990/-க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 203 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

16. திருநெல்வேலி மாநகராட்சியில் நாளொன்றுக்கு சுமார் 200 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. அதில் சுமார் 120 மெட்ரிக் டன் மட்கும் கழிவுகள், 55 மெட்ரிக் டன் மக்காத உலர் கழிவுகள், 5 மெட்ரிக் டன் வீட்டு அபாயகரமான கழிவுகள், 10 மெட்ரிக் டன் கழிவுகள் மற்றும் 10 மெட்ரிக் டன் அளவிலான பிற வகையான கழிவுகள் உள்ளடங்கும். மேலே குறிப்பிட்டுள்ள கழிவுகளை மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ல் கண்டுள்ள விதி எண். 15(h) படி தரம் பிரிக்கப்பட்ட நிலையில் சேகரம் செய்திடல் வேண்டும். தற்சமயம் இம்மாநகராட்சியில் மேற்கூறியபடி தரம் பிரிக்கப்பட்ட நிலையில் சேகரம் செய்யப்படும் கழிவுகளை இரண்டாம் கட்டமாக சேகரம் செய்து சாலை ஓரங்களில் இருப்பில் வைக்க போதுமான அளவில் குப்பைத் தொட்டிகள் இல்லாத நிலை உள்ளதால் கூடுதலாக தேவைப்படும் 350 எண்ணம் புதிய 1.1 கன. மீட்டர் கொள்ளளவிலான உலோகத்திலான குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இம்மாநகராட்சி உள்ளது.

எனவே இம்மாநகராட்சியில் தரம் பிரிக்கப்பட்ட நிலையில் சேகரம் செய்யப்படும் கழிவுகளை இரண்டாம் கட்டமாக சேகரம் செய்து சாலை ஓரங்களில் இருப்பில் வைக்க 350 எண்ணம் புதிய 1.1 கன. மீட்டர் கொள்ளளவிலான உலோகத்திலான குப்பைத் தொட்டிகளை ரேட் கான்ட்ராக்ட் சப்ளை முறையில் (Rate Contract Supply Method) கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க. எண். இ2/7441/2022

**தீர்மானம் எண்: 204 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**